# நான் என்ன செய்ய வேண்டும்?

தொடர் - 45

ஜூலை 2012

*தொகுப்பு :* **Dr. B. வில்லியம் தர்ம ராஜா**

**ஏசாயா**

2251 கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்து (40:3)

2252 அவாந்தர வெளியிலே (wilderness) தேவனுக்குப் பாதையைச் செவ்வைபண்ணு (40:3)

2253 கர்த்தருக்குக் காத்திரு; புதுப்பெலன் அடைவாய்; கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவாய் (40:31)

2254 கர்த்தருக்குள்ளே களிகூரு (41:16)

2255 இஸ்ரவேலின் பரிசுத்தருக்குள்ளே மேன்மை பாராட்டு (41:16)

2256 நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்து (42:3)

2257 கர்த்தரை நோக்கிக் கூப்பிடு (43:22, 64:7)

2258 உன் பலிகளால் கர்த்தரைக் கனம்பண்ணு (43:23)

2259 கர்த்தருக்குத் தேவையானதை உன் பணங்களால் கொள் (43:24)

2260 உன் பலிகளால் கர்த்தரைத் திருப்தியாக்கு (43:24)

2261 கர்த்தரை நோக்கிப் பார்; இரட்சிக்கப்படுவாய் (45:22)

2262 முந்திப் பூர்வகாலத்தில் நடந்தவைகளை நினை (46:9)

2263 உண்மையும் நீதியுமுள்ளவனாயிரு (48:1)

2264 கர்த்தருக்குக் காத்திரு; நீ வெட்கப்படுவதில்லை (49:23)

2265 இளைப்படைந்தவனுக்கு சமயத்திற்கேற்ற வார்த்தை சொல் (50:4)

2266 நீ வெட்கப்பட்டுப் போவதில்லையென்று அறி; ஆதலால் உன் முகத்தை கற்பாறைப் போலாக்கு (50:7)

2267 நீ கர்த்தருடைய நாமத்தை நம்பி, தேவனைச் சார்ந்து கொள் (50:10)

2268 நீதியைப் பின்பற்றி, கர்த்தரைத் தேடு (51:1, 65:10)

2269 "தகப்பனாகிய ஆபிரகாமையும், பெற்ற சாராளையும் நோக்கிப்பார்; அவன் ஒருவனாயிருக்கையில், நான் அவனை ஆசீர்வதித்து, அவனைப் பெருகப் பண்ணினேன்" (51:2)

2270 எழும்பு, எழும்பு, உன் வல்லமையைத் தரித்துக்கொள்; உன் அலங்கார வஸ்திரங்களை உடுத்திக் கொள் (52:1)

2271 தூசியை உதறிவிட்டு எழுந்திரு; உன் கழுத்திலுள்ள கட்டுகளை அவிழ்த்துவிடு (52:2)

2272 கர்த்தருடைய பாத்திரத்தைச் சுமக்கிற நீ அசுத்தமானதின் நடுவிலிருந்து புறப்பட்டு, உன்னைச் சுத்திகரி. (52:11)

2273 "நீ எனக்குக் கவனமாய்ச் செவிகொடு" (55:2,3)

2274 கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் தேடு; அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடு (55:6)

2275 நியாயத்தைக் கைக்கொண்டு, நீதியைச் செய் (56:1)

2276 ஓய்வுநாளைப் பரிசுத்தக்குலைச்சலாக்காதபடி ஆசரி (56:2,4,6)

2277 ஒரு பொல்லாப்பையும் செய்யாதபடி உன் கையைக் காத்துக்கொள் (56:2)



2278 "எனக்கு இஷ்டமானவைகளைத் தெரிந்து கொள்" (56:4)

2279 கர்த்தரைச் சேவி; கர்த்தரைச் சேர் (56:6)

2280 கர்த்தருடைய நாமத்தை நேசி (56:6)

2281 கர்த்தருக்கு ஊழியக்காரனாயிரு (56:6)

2282 அக்கிரமத்தின் கட்டுகளை (Chains of oppression) அவிழ் (58:6)

2283 நுகத்தடியின் பிணையல்களை (Yoke of injustice) நெகிழ் (58:6)

2284 நெருக்கப்பட்டிருக்கிறவர்களை (oppressed) விடுதலையாக்கு (58:6)

2285 சகல நுகத்தடிகளையும் உடைத்துப்போடு (58:6)

2286 பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்து கொடு (58:7,10)

2287 துரத்துண்ட சிறுமையானவர்களை (homeless poor) வீட்டிலே சேர்த்துக்கொள் (58:7)

2288 வஸ்திரமில்லாதவனைக் (who have nothing to wear) கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடு (58:7)

2289 ஓய்வுநாளை மகிமையாக (Sacred) எண்ணு (58:13)

2290 இரத்தத்தால் கறைபடாத கைகளும், அக்கிரமத்தால் கறைபடாத விரல்களும் கொண்டிரு (59:3)

2291 நீதியைத் தேடு (59:4)

2292 சத்தியத்தின்படி வழக்காடு (59:4)

2293 உன் கைகளிலிருக்கும் கொடுமையான செய்கையை விட்டு விடு (59:6)

2294 உன் கால்கள் பொல்லாப்புச் செய்ய ஓடாதிருப்பதாக (59:7)

2295 சமாதான வழியை அறி (59:8)

2296 கள்ள வார்த்தைகளைக் கர்ப்பந்தரித்து, இருதயத்திலிருந்து பிறப்பிக்கப் பண்ணாதே (59:13)

2297 எழும்பிப் பிரகாசி (60:1)

2298 நியாயத்தை விரும்பு (61:8)

2299 வாசல்கள் வழியாயப் பிரவேசி (62:10)

2300 ஜனத்துக்கு வழியைச் செவ்வைப்படுத்து; பாதையை உயர்த்து; அதிலுள்ள கற்களைப் பொறுக்கிப் போடு (62:10)

**தேவனுக்கே மகிமை**



# "இணையற்ற இயேசு"

Dr. P. செல்வராஜ், கோவை

"ஒருவன் என் (இயேசு) பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" (மாற்கு 8:34)

உலகில் பல இயக்கங்கள் இருக்கின்றன. அவ்வப்போது புதிய புதிய இயக்கங்கள் உருவாகிக்கொண்டும் இருக்கின்றன. ஒவ்வொரு இயக்கத்தின் பின்னணியிலும் 'குரு' என்று அழைக்கப்படுகின்ற தலைவர் இருக்கிறார். அத்தகைய தலைவர்களின் எண்ணிக்கை ஏராளம். அவர்கள் மகிழ்ச்சியோடு வாழ்வது எப்படி என்று கற்றுத்தருகிறார்கள். வெற்றியுள்ள வாழ்க்கைக்கான அறிவுரைகளை அள்ளி வழங்குகிறார்கள். அவர்களில் யாராவது ஒருவர் "என்னைப் பின்பற்ற விரும்புகிறவர்கள் பாடுகள் படத் தயாராக" இருக்கவேண்டுமென்று கூறுகிறாரா? உண்மையிலேயே இயேசு ஒப்பற்றவர்தான் என்பது தெளிவாகத் தெரிகிறதல்லவா?

கால்ப்ரெய்த் பெரி ரோஜர்ஸ் எனும் வியானி 1911ம் ஆண்டு அமெரிக்காவின் ஒரு கடற்கரையிலிருந்து மறு கடற்கரையை பழைய விமானமொன்றில் சுமார் 3 நாட்களில் கடப்பதற்குப் பதிலாக 49 நாட்களுக்குப் பின் கடந்தார். காரணம் என்ன? அவருடைய பயணத்தில் 39 தடவை விமானம் கீழே விழுந்தது, 30 தடவை திட்டமிடாத இறக்கம் செய்ய வேண்டியதாயிற்று. ஆனாலும் அவர் சோர்வடையாமல் கடந்தார். ஆம், பாடுகளினூடாக, வேதனையினூடாக அவர் வெற்றி பெற்றார்.

"உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் (பவுலும் அவருடைய உடன் ஊழியர்களும்) அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்" (ரோமர் 5:3,4). பாடுகளைக் குறித்து மேன்மை பாராட்டுவதா? அது வேண்டாம் அல்லது தேவையில்லை என்று கூறுகிறீர்களென்றால் கிறிஸ்துவின் அறிவுரை, ஏன் கிறிஸ்தவமே உங்களுக்குப் புரியவில்லை என்பதுதான் பொருள்.

"நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால் அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மை செய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும்... கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு... உங்களுக்கு (ஒரு) (முன்) மாதிரியை வைத்துப்போனார்" (1பேதுரு 2:20). இக்கால சராசரி 'குரு' என்ன கூறுகிறார், எப்படி வாழ்கிறார், என்ன சொல்கிறார்?


**விருதுநகர் மாவட்டம் ஏழாயிரம் பண்ணை**

*தேவனுடைய கூடாரத்தில்*

## திறப்பின் வாயில் ஜெபம்

**2012 ஜீலை 25 கடைசி புதன் - காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**

*நீங்களும் வாருங்கள்!* *கலந்து கொள்ளுங்கள்!* *இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்!!*

*நேரில் கலந்து கொள்ள முடியாதவர்கள் உங்கள் ஜெப விண்ணப்பங்களை எங்களுக்கு கீழ்க்கண்ட முகவரியில் அனுப்பலாம்.*

**தேவனுடைய கூடாரம்,** மெயின் ரோடு, ஏழாயிரம்பண்ணை-626 201. போன் 04562-258194




வாலிபர் பக்கம்

# விசுவாசம் - இரட்சிப்புக்கேற்ற விசுவாசம்

## *Faith for Salvation*

*சகோ. S. ஜெபராஜ்* President, Grace Ministries

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளுக்கு இன்ப இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் தேவனுக்கென்று செயல் வீரர்களாய் வீராங்கனைகளாய் மாற மிகவும் அவசியமான விசுவாசத்தை குறித்ததான தொடர் செய்தியினை காண இருக்கிறோம். விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் (எபி. 11:6). தேவனைப் பிரியப்படுத்துவது தர்மங்களோ, பொன் வெள்ளியோ, சன்மார்க்க வாழ்க்கையோ அல்ல. தேவனைப் பிரியப்படுத்த ஒரே வழி விசுவாசம். விசுவாசமில்லாமல் மனிதன் இரட்சிக்கப்படவோ, நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளவோ, விடுதலை பெறவோ முடியாது.

பழைய ஏற்பாட்டில் அநேக விசுவாச வீரர்களைப் பற்றி வாசிக்கிறோம் புதிய ஏற்பாட்டில் எபிரேயருக்கு எழுதின நிருபத்தில் இவர்களுடைய ஒரு நீண்ட பட்டியலை நாம் காண்கிறோம். ஒவ்வொரு பெயருக்கு முன்பிலும் 'விசுவாசத்தால்' இவர்கள் இன்னது செய்தார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது நம்முடைய அன்றாட வாழ்க்கையிலும் சிறிதும் பெரிதுமான காரியங்கள் விசுவாசத்தோடு தொடர்பு கொண்டதாக இருக்கிறது. சம்பூரண மும் சந்தோஷமுமுள்ள வாழ்க்கை நடத்த விசுவாசம் தேவை. அநேக வேளைகளில் அற்புதம் நடப்பதற்கான விசுவாசம் நமக்கு இல்லாமல் போக ஒரு காரணம் விசுவாசத்தைக் குறித்துள்ள நம்முடைய தவறான கருத்தே காரணம். தேவன் இதை சொல்லியிருக் கிறார். நான் இதை ஏற்றுக் கொள்ளுகிறேன் என்கிற இப்படிப்பட்ட ஒரு மனிதனுடைய தீர்மானத்தைத்தான் விசுவாசம் என்று சொல்லுகிறோம். அது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. (எபி. 11:1).

### *சரீர இரட்சிப்புக்கேற்ற விசுவாசம்*

தேவனோடு உள்ள தொடர்பில் உண்மையாக நிலைத்திருப்பதும், சகமனிதரோடு உள்ள உறவில் உண்மையய் இருப்பதும் விசுவாசத்தின் அறிகுறிகள். இயேசு கூறினார். என்னிடத்தில் விசுவாசமாயிருங்கள் (யோவா. 14:1) பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ. சரீர சுகத்தை நாடி பல மருத்துவர்களிடம் போய் சுகம் பெறுவதற்கு மாறாக வருத்தத்தையும் வேதனையும் அதிகமாக்கினதுடன் தனக்கு உண்டானவைகளையெல்லாம் செலவழித்தும் சற்றாகிலும் குணமடையாமல் அதிக வருத்தப்பட்டாள். (மாற். 5:25, 26) சுகம் பெறும்படியான ஒரு சிறப்பான விசுவாசம் அவளுக்குள்ளே துளிர்த்தது. இயேசுவின் வஸ்திரத்தைத் தொட்டால் போதும் நான் சொஸ்தமடைவேன் என்று கூறி செயல்படும் அளவிற்கு விசுவாசத்தின் சிகரத்திற்கே சென்று விட்டாள். இயேசுவின் வஸ்திர ஓரத்தைத் தொட்டாள். அற்புதமாக வேதனை நீங்க ஆரோக்கியம் அடைந்ததைத் தன் சரீரத்தில் உணர்ந்தாள். (மாற். 5:27-29) இயேசு அவளைப் பார்த்து : மகளே உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. நீ சமாதானத்தோடே போய் உன் வேதனை நீங்கி சுகமாயிரு என்றார்.

சரீரத்தில் குறைகள், வியாதிகள் உள்ளவர்களாய் இயேசுவினிடத்தில் சுகத்தை நாடி வந்த ஒவ்வொருவரிடம் அவர் கேட்ட கேள்வி 'நீ விசுவாசிக்கிறாயா!' என்பதுதான். இயேசு இரண்டு குருடர்களை (மத்.9:27-29) உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு

ஆகக்கடவது. என்றார். உடனே அவர்கள் பார்வை அடைந்தார்கள். இன்னும் சிலர் அவர்கள் இயேசுவின் மீது வைத்த விசுவாசத்தினால் மற்றவர்களுக்கு சுகத்தைப் பெற்றுக்கொடுத்தார்கள்.

படுக்கையோடு திமிர்வாதக்காரனை சுமந்து வந்த மனுஷர்களின் விசுவாசத்தின் மூலம் திமிர்வாதக்காரன் சுகம் பெற்றான். (லூக். 5:18-25) யவீரு என்ற ஜெப ஆலயத்தலைவனுடைய விசுவாசத்தினிமித்தம் மரித்த மகளை இயேசு உயிரோடு எழுப்பினார். நீ விசுவாசமுள்ளவனாயிரு. அப்பொழுது அவள் இரட்சிக்கப்படுவாள் என்று கூறினார். (லூக். 8:41-55).

ஊமையான ஆவியினால் பாதிக்கப்பட்ட மனிதனின் தகப்பன் கண்ணீரோடு இயேசுவிடம் வந்தபோது இயேசு அவனை நோக்கி நீ விசுவாசிக்கக் கூடுமானால் ஆகும். விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார். அவன் கண்ணீரோடு விசுவாசக்குறைவை அறிக்கை செய்தபோது மகன் பரிபூரண சுகம் பெற்றான். (மாற்கு 9:17). மார்த்தாள், மரியாள் என்பவர்களின் விசுவாசத்தினிமித்தம் மரித்த லாசருவை இயேசு உயிரோடு எழுப்பினார். (யோவா. 11:21-45). இதினிமித்தம் யூதர்களில் அநேகர் இயேசுவினிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்.

### *ஆத்தும இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் :*

இயேசு சீமோன் என்பவருடைய வீட்டிற்கு வந்திருந்தபோது பாவியாகிய ஒரு ஸ்திரீ இயேசுவின் கால்களை கண்ணீரினால் நனைத்து தலைமுடியினால் துடைத்து விலையேறப்பெற்ற பரிமளதைலத்தை இயேசுவின் பாதங்களில் பூசினாள். அவளுடைய விசுவாசத்தை இயேசு கண்டு அவளை நோக்கி, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது. உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. சமாதானத்தோடே போ என்றார். (லூக். 7:37-50). சமாரிய ஸ்திரீயுடனே இயேசு சம்பாஷித்தபோது அவள் இரட்சிக்கப்பட்டதோடு அல்லாமல் சமாரியரில் அநேகர் விசுவாசமுள்ளவர்களாகி இயேசு மெய்யாய் கிறிஸ்துவாகிய உலக இரட்சகர் என்று அறிக்கை செய்தார்கள். (யோவா. 4:8-42). பவுலும், சீலாவும் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு, நடுராத்திரியில் ஜெபம்பண்ணி தேவனைத் துதித்து பாடியபோது சிறைச்சாலையின் கதவுகளெல்லாம் திறவுண்டது. சிறைச்சாலைக்காரன் ஆண்டவன்மாரே இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும் எனக் கேட்டபோது, பவுல் கூறினார்: கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் (அப். 16:31). அன்று அந்த ராத்திரியில்தானே, சிறைச்சாலைக்காரனும், அவனுடையவர்கள் யாவரும் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள்.

நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமாயிருந்தது (ரோமர் 13:11). கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் (எபே. 2:8). விசுவாசிக்கிறவன் இரட்சிக்கப்படுவான் (மாற். 16:16). ஒரு மனிதன் தன் விசுவாசத்தினால் மாத்திரமே கிறிஸ்துவை இரட்சகராகக் காணமுடியும். இந்த விசுவாசத்தை நீங்கள் எப்படி பெற்றுக்கொள்ள முடியும்? “விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்” (ரோமர் 10:17) அப்படியானால் “விசுவாசம் தேவனுடைய வசனத்தினாலே வரும்” விசுவாசத்திலே நிலைத்து அனுதினமும் இரட்சிக்கப்பட, நீங்கள் வளரும்படி புதிதாய் பிறந்த குழந்தைகளைப்போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள் (1பேது. 2:3). கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசியுங்கள். அப்பொழுது நீங்கள் உங்கள் சரீரத்திலும், ஆத்துமாவிலும் இரட்சிக்கப்படுவீர்கள்.



## V.B.S. 2012 நடைபெற்ற கிராமங்கள் பெயர்சொல்லி ஜெபியுங்கள்

## தலைப்பு : நேசிக்கும் என் இயேசு

இந்த ஆண்டு V.B.S. நடைபெற்ற 267 இடங்களின் பட்டியலை உங்கள் ஊக்கமான ஜெபத்திற்காக தந்துள்ளோம். இன்னமும் V.B.S. கிராமங்களில் மாலை நேரங்களில் நடைபெற்று கொண்டிருக்கிறது. அவைகளுக்காக ஜெபியுங்கள். V.B.S. நடைபெற்ற இடங்களிலெல்லாம் சுவிசேஷத்தை அறிந்த சிறியோர், பெரியோர் எல்லோரும் தேவனை நோக்கி திரும்பும் படியாகவும் நல்ல நிலத்தில் விழுந்த விதையைப் போல வேத வசனம் அவர்கள் உள்ளத்தில் செழித்தோங்கும்படியாகவும் நாம் தேவனுடைய பாதத்தில் ஜெபித்து காத்திருப்போம்.

**ஜுலை 1** **V.B.S. 6 நாள் தலைப்புகள்**

1. நேசிக்கும் இயேசு என் சிருஷ்டிகர்
2. நேசிக்கும் இயேசு என் இரட்சகர்
3. நேசிக்கும்இயேசு என்னை பாதுகாப்பவர்
4. நேசிக்கும் இயேசு என் நண்பர்
5. நேசிக்கும் இயேசு என்னை குணமாக்குபவர்
6. நேசிக்கும் என் இயேசு என் ராஜா

**ஜுலை 2**

**தூத்துக்குடி மாவட்டம்**

பணித்தளம் : **ஆண்டாள்நகர்**

1 ஆண்டாள்நகர்
2 அல்லிக்குளம்
3 ஊனமுற்றோர் காலனி
4 பேரூரணி
5 சமத்துவபுரம்
6 இராமசாமிபுதூர்

**ஜுலை 3**

பணித்தளம் : **ஸ்ரீ மூலக்கரை**

7 ஸ்ரீமூலக்கரை
8 ஸ்ரீமூலக்கரை கீழூர்
9 ஸ்ரீ மூலக்கரை காலனி
10 இசவன்குளம் கீழூர்
11 இசவன் குளம் மேலூர்
12 திருப்புளியங்குடி
13 தோழப்பன் பண்ணை

**ஜுலை 4**

பணித்தளம் : **பேட்மாநகரம்**

14 பேட்மாநகரம்
15 சுந்தரலிங்கநகர்
16 பேரூர்
17 பேரூர் காலனி
18 முத்துசாமிபுரம்
19 முத்துசாமிபுரம் (அருந்ததியார் காலனி)
20 நைனார்புரம் (மேற்கு)
21 நைனார்புரம் (RC தெரு)

**ஜுலை 5**

பணித்தளம்:**பட்டாண்டிவிளை**

22 பட்டாண்டிவிளை
23 ராஜமணிநகர்
24 மணலூர்
25 உண்டியலூர்
26 மங்களபுரம்
27 மங்கலக்குறிச்சி
28 அம்மாள் தோப்பு
29 திருவழுதி நாடார் விளை (கரையிருப்பு)
30 கக்கன்நகர்
31 அருந்ததியார் காலனி
32 J.P. ஹோம்

**ஜுலை 6**

பணித்தளம் : **புதுக்கோட்டை**

33 மீனாட்சிப்பட்டி
34 தன்னூத்து
35 குறுமலை
36 ஆறுமுகநகர்
37 ராஜீவ்நகர்
38 இந்திராநகர்
39 முடிவைத்தானேந்தல்
40 திம்மராஜபுரம்
41 வாகைக்குளம்
42 மங்களகிரி
43 தெற்கு சிலுக்கன்பட்டி

**ஜுலை 7**

பணித்தளம் : **தாதன்குளம்**

44 தாதன்குளம்
45 கீழகருங்குளம்
46 காரசேரி
47 வல்லகுளம்
48 அரசகுளம்
49 சேரகுளம்
50 சினார்குளம்
51 பெத்தேல் விடுதி

பணித்தளம் : **பெரியநாயகபுரம்**

52 பெரியநாயகபுரம் கிழக்கு
53 பெரியநாயகபுரம் மேற்கு
54 கூட்டாம்புளி
55 சோரீஸ்புரம்
56 பொன்னகரம்

**ஜுலை 8**

பணித்தளம் : **தாளமுத்துநகர்**

57 கோட்ஸ்நகர்
58 கிருபா ஸ்கூல்
59 நேரு காலனி
60 சுனாமி காலனி
61 அன்னை தெரசாநகர்
62 மாதாநகர்
63 ராகேல் ஸ்கூல்

**ஜுலை 9**

பணித்தளம் : **தூத்துக்குடி ரூரல்**

64 பிரமுத்துவிளை
65 கிருஷ்ணராஜபுரம்

66 கணபதிநகர்

67 லூர்த்தம்மாள்புரம்

68 கக்கன்ஜீநகர்

69 திரேஸ்நகர்

70 கீதாநகர்

71 சில்வர்புரம்

**ஜூலை 10**

**திருச்சி மாவட்டம்**

பணித்தளம் : **மஞ்சம்பட்டி**

72 கரட்டுப்பட்டி

73 ஆபாரம்பட்டி மேற்கு

74 ஆபாரம்பட்டி கிழக்கு

75 மஞ்சம்பட்டி

76 பொய்கைபட்டி

77 கல்பாளையத்தான்பட்டி

78 புதுப்பட்டி

79 தோப்புபட்டி

80 கானபாடி புதூர்

81 பாம்பாட்டிபட்டி

**ஜூலை 11**

**திருநெல்வேலி மாவட்டம்**

பணித்தளம் : **அழகப்பபுரம்**

82 மடப்புரம்

83 முத்துராஜபுரம்

84 ராதாபுரம்

85 பெருமளஞ்சி

86 அழகப்பபுரம்

87 செம்பாடு

**ஜூலை 12**

பணித்தளம் :

**பழைய அப்பனேரி**

88 சித்திரம்பட்டி

89 சித்திரம்பட்டி காலனி

90 புது அப்பனேரி

91 பழைய அப்பனேரி

92 பழையஅப்பனேரிகாலனி

93 சாமித்தேவன்பட்டி

94 ஆவல்நத்தம்

95 சித்திரம்பட்டி நடுத்தெரு

**ஜூலை 13**

பணித்தளம் : **அத்தியூத்து**

96 சிறுக்கன்குறிச்சி

97 சீதற்பநல்லூர்

98 தருவநல்லூர்

99 சத்திரம்

100 உகந்தான்பட்டி

101 தெற்கு கிடாரக்குளம்

102 வடக்கு கிடாரக்குளம்

103 செட்டிகுறிச்சி

104 அகரம்

105 ஆண்டிப்பட்டி

106 மாயமான்குறிச்சி

107 நாச்சியார்புரம்

108 அத்தியூத்து

109 புதூர்

**ஜூலை 14**

பணித்தளம் : **திருவேங்கடம்**

110 வெள்ளாகுளம்

111 திருவேங்கம்

112 கொலசரன்கோட்டை

113 ஆவுடையாபுரம்

114 கல்லம்பட்டி

115 தொற்காம்பட்டி

116 உமயதலைவன்பட்டி

**ஜூலை 15**

பணித்தளம் : **அய்யனேரி**

117 கொடப்பாறை

118 அய்யனேரி

119 ஆண்டிப்பட்டி

120 பிள்ளையார்நத்தம்

121 புளியங்குளம்

122 லெட்சுமியம்மாள்புரம்

123 வெங்கடாசலபுரம்

**ஜூலை 16**

பணித்தளம் : **முக்கூட்டுமலை**

124 முக்கூட்டுமலை

125 நக்கலமுத்தன்பட்டி

126 பாறைப்பட்டி

127 நடுவப்பட்டி

128 கஸ்தூரி ரெங்கபுரம்

பணித்தளம் : **மைப்பாறை**

129 மைப்பாறை

130 குகன்பாறை

131 காசிலிங்காபுரம்

132 அருணாசலபுரம்

133 நரிக்குளம்

134 நடுவப்பட்டி

**ஜூலை 17**

பணித்தளம் : **வடமலாபுரம்**

135 வடமலாபுரம்

136 வல்லராமபுரம்

137 சமத்துவபுரம்

138 முத்துசாமி புரம்

பணித்தளம் : **மேலச்செவல்**

139 ராஜீவ்காந்திநகர்

140 கொழுமடை

141 எழில்நகர்

142 சொக்கலிங்கபுரம்

143 வானயக்குளம்

144 மணிமுத்தலம்

145 பிராஞ்சேரி

**ஜூலை 18**

**திருப்பூர் மாவட்டம்**

பணித்தளம் : **ஊத்துக்குளி**

146 வேலம்பாளையம்

147 காளைபாளையம்

148 சென்னிமலைபாளையம்

149 காங்கேயன் பாளையம்

150 செங்கப்பள்ளி

பணித்தளம் : **பொங்கலூர்**

151 தொட்டிபாளையம்

152 வெள்ளைமடை

153 அம்மா பாளையம்

154 கெங்க நாயக்கன்பாளையம்

155 சின்னகாட்டூர்

**ஜூலை 19**

**விருதுநகர்மாவட்டம்**

பணித்தளம் :

**பழையசென்னல்குளம்**

156 பழையசென்னல்குளம்

157 புது சென்னல்குளம்

158 புதூர்

159 கோபாலபுரம்

160 வேப்பங்குளம்

161 மேட்டூர்

162 கண்ணார்பட்டி

**ஜூலை 20**

பணித்தளம் :

**புல்லக்கவுண்டன்பட்டி**

163 புல்லக்கவுண்டன்பட்டி

164 புல்லக்கவுண்டன்பட்டிகாலனி

165 வல்லம்பட்டி

166 பனையடிபட்டி

பணித்தளம் : **நள்ளி**

167 சின்ன ஓடைப்பட்டி



168 கஞ்சம்பட்டி காலனி

169 நள்ளி

**ஜூலை 21**

பணித்தளம் :

**புல்லலக்கோட்டை**

170 நந்திரெட்டியபட்டி

171 நந்திரெட்டியபட்டி காலனி

172 சித்தூர்

173 சித்தூர் காலனி

174 சேர்வைக்காரன்பட்டி

175 நல்லமநாயக்கன்பட்டி

176 குராயூர்

177 புல்லலக்கோட்டை

178 சித்தூர் ஹாஸ்டல்

**ஜூலை 22**

பணித்தளம் :

**ஜமீன்சல்வார்பட்டி**

179 ஜமீன் சல்வார்பட்டிங

180 கீழபெத்துலுபட்டி

181 மேலபெத்துலுபட்டி

182 கல்போது

183 சொக்கலிங்கபுரம்

184 முதலிபட்டி

185 பூச்சக்காபட்டி

186 லெட்சுமிபுரம்

187 நாரணாபுரம்

188 செல்லநாயக்கன்பட்டி

**ஜூலை 23**

பணித்தளம் :

**N. திருவேங்கிடபுரம்**

189 N. திருவேங்கிடபுரம்

190 R.திருவேங்கிடபுரம் காலனி

191 ரெட்டியபட்டி

192 அச்சந்தவிழ்த்தான்

பணித்தளம் : **மயிலாடுதுறை**

193 முத்த நாயக்கன்பட்டி

194 கீழ ஒட்டம்பட்டி

195 கீழ ஒட்டம்பட்டி காலனி

196 கோணம்பட்டி

**ஜூலை 24**

பணித்தளம் : **பண்டுதன்பட்டி**

197 பண்டுதன்பட்டி

198 ஆலத்தூர்

199 நொச்சிகுளம்

200 நாகப்பாளையம்

201 மாயத்தேவன்பட்டி

202 மலையூரணிப்பட்டி

203 கோப்பயநாயக்கர் பட்டி

204 நக்கமங்கலம்

பணித்தளம் : **சிவகாசி**

205 Good Shepherd School

206 ஜீவகல் உறைவிடப்பள்ளி

207 மானகசேரி

208 முத்துசாமிபுரம்

209 ஆசாரி காலனி

210 பாரதிநகர்

211 புதூர்

212 அம்மாபட்டி

**ஜூலை 25**

பணித்தளம் :

**7000 பண்ணை**

213 அப்பனம்பட்டி

214 கோவில் செல்லையாபுரம்

215 நடுச்சூரங்குடி

216 மடத்துப்பட்டி

217 ஊத்துப்பட்டி

218 சிவசங்குபட்டி

219 சோழப்பட்டி

**ஜூலை 26**

பணித்தளம் : **சாத்தூர் ரூரல்**

220 ஆலம்பட்டி

221 அணைக்கரைப்பட்டி

222 ஒத்தையால்

223 ஒத்தையால் காலனி

224 மேட்டுப்பட்டி

225 ஸ்ரீரெங்கபுரம்

226 சுந்தரக்குடும்பன்பட்டி

227 சாத்தூர்

**ஜூலை 27**

**திண்டுக்கல் மாவட்டம்**

பணித்தளம் : **தொப்பம்பட்டி**

228 தொப்பம்பட்டி

229 தோப்புப்பட்டி (வடக்கு)

230 தோப்புப்பட்டி தெற்கு

231 கோடங்கிநாயக்கன் பட்டி

232 அப்பாவுபிள்ளைபட்டி

233 செல்வநகர்

234 அப்பிநாயக்கர்பட்டி

235 நோட்டக்காரன் பட்டி

**ஜூலை 28**

பணித்தளம் : **விராலிப்பட்டி**

236 விராலிப்பட்டி

237 சின்னமநாயக்கன்கோட்டை

238 சி.நாயக்கன் கோட்டை காலனி

239 பெருமன்பட்டி

240 ஊத்துப்பட்டி

241 கோவில்பட்டி

242 மீனாட்சிபுரம்

243 தம்பி நாயக்கன்பட்டி

**ஜூலை 29**

பணித்தளம் :

**வடக்கு வாகைக்குளம்**

244 சின்ன வாகைக்குளம்

245 கள்ளிகுளம்

246 கே. புதூர் அண்ணாநகர்

பணித்தளம் : **திருச்செந்தூர்**

247 பிரசாத்நகர்

248 பிச்சிவிளை

249 கொம்புதுறை

250 ராஜ் கண்ணாநகர்

பணித்தளம் : **அம்பை**

251 பெரியகுளம்

**ஜூலை 30**

பணித்தளம் :

**முத்தாண்டியாபுரம்**

252 கீழமேட்டூர்

253 மேலமேட்டூர்

254 ரெட்டியபட்டி

255 கரிசல்பட்டி

256 கீழ செல்லையாபுரம்

257 முத்தாண்டியாபுரம்

258 வெள்ளையாபுரம்

259 கிருஷ்ணாபுரம்

**ஜூலை 31**

பணித்தளம் : **திரளி**

260 வலயப்பட்டி

261 சௌடார்பட்டி

262 மீனாட்சிபுரம்

263 கிழவனேரி

264 கிழவனேரி காலனி

265 நடுவக்கோட்டை

266 அச்சம்பட்டி

267 திரளி

தொடர்ச்சி அடுத்த மாத இதழில்

# ஜெபமே என் வாழ்வின் செயலாக மாற

பா. பொற்செல்வன் ஆசீர்

ஜெபம் அது தேவன் சாதாரண மனிதன் கையில் அசாதாரணமானவைகளை சாதித்துவிட தேவன் தந்துவிட்ட எளிய ஆயுதம். ஜெபிக்கும்போது திருத்துவ தேவனின் திருத்துவ செயல் பரலோகத்திலிருந்து பூமிக்குத் திருப்பப்படுகிறது. ஜெபம் என்பது பரமண்டலங்களிலிருக்கிற நம்முடைய பிதாவை நோக்கி குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் (யோ. 14:13,14) பரிசுத்த ஆவியானவரின் பெலத்தோடு (ரோ. 8:26,27) செய்யப்படுவது ஆகும்.

குதிங்காலில் நின்று (பிரசங்கித்து) சீரிழந்தோரை நீங்கள் கண்டிருக்கலாம். ஆனால் முழங்காலில் நின்று சீரிழந்தோரை காண இயலாது. முழங்கால் ஜெபம் பாவியாகிய ஆயக்காரனையும் சீர்கேடுகளை குணமாக்கி, சீராக்கிய இவனே நீதிமான் (லூக். 18:13,14) என்ற இயேசுவின் சாட்சியை அவனுக்குப் பெற்றுத்தந்தது. இந்த ஜெபம் இன்னும் மகிமைக்குள் பிரவேசித்தால் நீதிமான் என்னும் மேன்மையான சாட்சியை நீங்களும் காணலாம்.

விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே. (ரோமர் 14:23) என்றால் தேவனிடத்தில் இருந்து வராத யாவுமே பாவம் எனக் கொள்வது தவறாகாது. தேவனிடத்தில் உள்ள யாவையும் நமக்குள்ளே கொண்டுவருவது நமக்காக சுதந்தரிக்கச் செய்வது ஜெபத்தின் வல்லமையே. அப்படியானால் ஜெபத்தினால் வராத யாவையும் பாவமே என்பதில் என்ன தவறு. தவறில்லையே.

ஜெபம் என்பது நமக்காக நம்முடையவவைகளுக்காக தேவனுடைய முகத்தை நோக்கிப்பார்த்து கெஞ்சி நிற்பது மாத்திரமல்ல, தேவனுக்காக தேவனுடைய சித்தமும், சட்டமும், அவரது விருப்பமும் (மத். 6:10). நம்மிலும், தேசத்திலும், பூமியிலும், நிறைவேறிட வேண்டிநிற்பது ஜெபத்திலேதான். நம்முடைய விருப்பங்களை, ஆசைகளை, மனபாரங்களை அன்பு நேசர் பாதம் கொட்டிவிடும் மகிழ்வுறு அனுபவம் ஜெபம்தான். ஆனால் ஜெபம் அதிலும் மேன்மையானது. நான் ஒருவனாய் ஆலையை மிதித்தேன். ஜனங்களில் ஒருவனும் என்னோடு இருந்தது இல்லை. துணை செய்வார் ஒருவரும் இல்லை. தாங்குவார் ஒருவரும் இல்லை என்று (வேதனை கலந்த துக்கம் நிறைந்த) ஆச்சரியத்தோடு (ஏசா. 63:3,5) நிற்கும் தேவனை அவரது துக்கம் நீக்கி, வேதனை நீக்கி மகிழ்ச்சியாக்குவதே ஜெபத்தின் மேன்மை.

நம் பாரம் நீங்க தேவன் அதை தமதாக்கிக் கொள்வதை ஜெபத்தின் மூலம் நாம் பெறும் பயனாகும். தேவனின் பாரம்புரிந்து அதை அறிந்து அவரது பாரத்தை நமதாக்கிக் கொள்வது ஆவிக்குரிய வாழ்வின் பெலன் ஆகும். இப்படிப்பட்டோர் தங்கள் சுய இருதயத்தையே தேற்றிக் கொண்டிராமல் தேவனின் இதய துடிப்பை அறிந்து வாழ கற்றுக் கொண்டோராவர். இவரே தன் நேசர் மேல் **சார்ந்து கொண்டு** வனாந்தரத்தில் இருந்து வருகிற இவள் யார் (உன். 8:5) என்று எருசலேம் குமாரத்திகளும் கண்டு ஆச்சரியப்படும் மணவாட்டியாய் நிலைபெறுவர். இவரே தேவனை சார்ந்து வாழ கற்றுக்கொண்டோர் அவர்கள் இருதயம் தேவனின் இருதயத்தைப்போல் துடிக்கும். இவர்கள் கால்கள் தேவனுக்காய் தீவிரிக்கும். இவர்கள் வாய் சாக்குப்போக்குச் சொல்லாது. இவர்கள் கரங்கள் சாதிக்க, துணியும். இவர்கள் கண்கள் பரமனையே நோக்கும். தேவசித்தம் என்பதே இவர்கள் இதய துடிப்பாகும் (எசே. 22:30) தேவனின் "காணேன்" என்ற தேட்டத்தை "இதோ கண்டுபிடித்தேன்" என்ற சான்றுகளாய், சாட்சிகளாய் மாறி



மாற்றிவிடுவர் இப்படி தேவனின் தேட்டத்தை மாற்றியோர்தான் சார்லஸ்பென்னி. டேவிட் பிரேயினார்டு, கோபோர்த் ஆஸ்வால்ட் ஸ்மித்தும் போன்றோரும் ஆவர்.

இவர்களில் ஒருவராய் நீங்களும் மாறிட தேவனின் பாதத்தில் உங்களை ஊற்றிவிட பழகுங்கள். ஜெபம் என்பது யுத்தக்களம் போன்றது. ஜெபம் ஒரு பக்கம் மகிழ்ச்சியானதுதான். ஆனால் அதின் மறுபக்கம் போராட்டம் நிறைந்தது. ஜெபவாழ்வின் போராட்ட எல்லைக்குள் இன்னும் பிரவேசியாதோர் ஜெபம் என்னும் ஓட்டப்பாதையில் துவக்கத்தின் நிலையிலே தங்கிவிட்டோர் என்றே சொல்ல வேண்டும். எப்பாப்பிராவும் தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான். (கொலோ. 4:12) இது எத்தனை உண்மை.

முழங்காலின் ஜெப அனுபவத்திற்கு எதிராளி பழைய பாம்பாகிய வலுசர்ப்பமே. ஆகவேதான் இது ஒரு போராட்டத்தின் அனுபவம். இந்த போராட்டம் மாம்சத்தோடும், இரத்தத்தோடும் அல்ல (எபே. 6:12) அல்லவே அல்ல பொல்லாத ஆவிகளின் சேனைகளோடேதான் போராட்டம்.

ஜெபிக்க முடியவில்ல என்ற சூழ்நிலை ஏற்படும்போது, சோர்வுகள் சூழ்ந்துகொள்ளும் போது எதிராளியாகிய பிசாசானவன் எதிர்த்து நிற்க எழும்பி நிற்கிறான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். ஜெபபோராட்டத்தை ஜெயிக்க, ஜெபிக்க மனம் வரும்வரை ஜெபித்துக் கொண்டே இருப்பதுதான் வழி. ஜெபிக்க மனமில்லை என்றோ ஜெபிக்க முடியவில்லை என்றோ முழங்காலை விட்டு எழும்பிவிடுவோம் என்று சத்துரு போடும் தடைகற்களை தாண்டிவிட்டோர் அல்ல. சத்துரு போட்ட தடைகற்களில் இடறிவிழுந்தோர் ஆவர். சத்துருவை ஜெயிப்பது ஜெபத்திலேதான். ஆகவே அவன் ஜெயிக்கப்படும்வரைக்கும் முழங்காலை விட்டு எழுந்துவிடாதிருங்கள். அப்போது நீங்கள் ஜெப ஜெயவீரர் ஆவீர்கள்.

நீண்ட நேரம் ஜெபித்து முழங்காலிலேயே நின்று தூங்கிவிடுவோரை பார்த்திருக்கிறேன். அவ்வனுபவம் கண்டும் இருக்கிறேன். இது தவறல்ல. குற்றமனசாட்சிக்கு இடங்கொடாதிருங்கள். சரீரம் பெலவீனமுள்ளதுதானே; அதற்கும் தேவை இளைப்பாறுதல் அல்லவா! முழங்காலில் விழித்தவுடன், ஜெபம் தொடரட்டுமே.

ஆனால் ஜெபிக்க முழங்கால் படியிட்டவுடன் தூக்கம் வருகிறது தூங்கிவிடுகிறேன் என்பீர்களேயானால் ஜாக்கிரதையாயிருங்கள். நீங்கள் ஜெயிக்க வேண்டியது உங்கள் மாம்சம். நீங்கள் ஜெயிக்க வேண்டியது கனநித்திரையின் ஆவி (ஏசா. 29:10) (ரோ. 11:8) தூக்கம் வந்தவுடன் மாம்சத்திற்கு இடம் கொடுத்து படுக்கையை தேடாதிருங்கள். கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்து கொள்ளுங்கள். (எபே. 5:11)

ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது ஆகவே சோதனைக்குட் படாதபடிக்கு விழிந்திருந்து ஜெபம் பண்ண வேண்டியது எத்தனை அவசியம் (மத். 26:41)

ஆவியிலே நிறைந்திருங்கள்; ஆவிக்கு விரோதமாய் மாம்சம் இச்சிக்கிறது. ஆவிக்கு விரோதமாய் மாம்சம் போர் செய்கிறது. மாம்சத்தின்படி பிழைத்தால் ஆவிக்குரிய வாழ்வில் நாம் வாங்குவது மரண அடிதான். ஆனால் ஆவியினாலே மாம்சத்தை அதாவது சரீரத்தின் செய்கைகளை ஜெயித்தால் அல்லது அழித்தால் நாம் அடைவது உயிருள்ள ஆவியின் வாழ்வு.

எனவே ஜெபவாழ்வின் ஜெயத்திற்கு நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிற பரிசுத்த ஆவியானவரை சார்ந்திருங்கள். ஆவியில் நிறைந்து எந்த சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பம் பண்ணுங்கள். (எபே. 6:18)

ஜெபம் வல்லமையை கொண்டு வருகிறது. எனவே ஜெபிக்கிற மனிதனால்

செயல்டாமல் இருக்க முடியாது. நமக்குள் ஜெபம் கொண்டு வரும் வல்லமை செயல்பட்டே ஆக வேண்டும். ஜெபத்தின் எல்லை விரிவானால், வல்லமையின் எல்லை விரிவடையும் வல்லமையின் எல்லை விரிவானால், ஊழியத்தின் எல்லையும் விரிவடையும், இயேசுவே என் சுவிசேஷம், உலகமே என் வயல்வெளி என்றார் ஜாண்வெஸ்லி. உங்கள் ஜெபம் குடும்பம் என்ற எல்லைக்குள் இருந்தால், உங்கள் குடும்பத்தில் ஆசீர்வதிக்கப்பட்டவராய் இருப்பீர்கள், உங்கள் ஜெபம் உலகம் என்ற வெளியை நோக்கி விரிவடைந்தால் உங்களிலிருந்து ஆசீர்வாதம் என்னும் வாய்க்கால் உலகமெங்கும் பாய்ந்தோடும் “நீங்கள் உலகமெங்கும் போய்” மாற். 16:15 என்று கட்டளையிட்டவர் உங்கள் ஜெபத்தை கேட்கிறவர். எனவே உங்கள் ஜெபத்தின் எல்லை விரிவடைய இடங்கொடுங்கள்.

---

## மானிடனே! உன் க[ா]லம் நீ அறியாயோ?

உலகபொருளுக்கு முண்டே உறுதியில்
சிலகாலம் பலமாதமெனும் – “கேரண்டி”
மின்னணு மின் சாதனம் கூட – திருத்தி
மீண்டும் திருப்பித் தர உண்டே – “வாரண்டி”
மானிடனே உன் வாழ்வுக் கேது – “செக்கியூரிட்டி”
நூறாண்டு வாழ்வதெப் “படி”யென்றே – ஊரார்க்கு
நறுக்காய் நாலுபத்து பக்கம் பிதற்றியும்
நாலுதிசை யோங்கி ஒலிக்க கூவி விற்றே
கூத்தாடியும் போய்சேர்ந்தார் பாதியாயுளில்
பார்! மானிடக் கேலி கூற்றை!
பறித்து பலநாளாயினும் சுவைக்க பழமும்
அரிந்துசில நாளாயினும் சமைக்க காய்கறியும்!
குன்றிடுமோ அதன் சத்து, சுவை, மணமும்
குப்பையில் கிடப்பினும் குன்றுமணி நிறம்மாறா
குழுமி கும்மியிட்டும் உன்மேனி பரிதாபமே!
விரியும் மொட்டு பறித்திடினும் – மறப்பதில்லை
விரிந்து மணம்வீச நற்கந்தமாய் – நாளில்
வீரமாய் நிரந்தர மெனமுழங்கும் உன் நிலை
“வீச்சு”, மலர்வளையம் வைத்தும் துர்க்கந்தமே – சில மணியில்!
காடுகடந்தும் நாடுபல சென்றும்
காரியம் சாதித்தும் காசுகோடி “சம்”பாதித்தும்
காரும் வீடும் உண்டு சாதிக்க ஞானமுமென துள்ளிடும் நீயோ
சறுக்கலான பாறையில் நிற்கும் ஓர் மூடனே!
உலகை ஆதாயமும் வாழ்வை நஷ்டமாக்கின்
கூடுவிட்டு ஆவிபோனால் உன் நிலை நிர்ப்பந்தமே!
உடல்விட்டு உயிர்போயின் கூட வருமோ – ஒன்றுமிலா
ஆறடிமணிதனை உருவாக்கியே, தூய்மையு மாக்கி – நித்ய
ஆயுளைக் கூட்டித்தரும் நாதர் யேசுவை நோக்கிப்பார்
நீடித்து வாழ்வாய் மண்ணிலும் விண்ணிலும்!
இன்றே இரட்சனிய நாள், அநுக்கிரக காலம்
சார்ந்து கொள் அன்பர் யேசுவை இந்நாளில்
உன் காலம், ஜீவன் அவர் கையில் மறவாய் மனமே (சங். 31:15)

***Bro. K.F. Merin***



# என் ஜெபம் கேட்கப்பட்டதா?

அன்பின் தம்பிக்கு,

அன்புடன் எழுப்புதலின் வாழ்த்துக்கள்! தம்பி உனது கடிதம் கண்டேன்! உனது ஜெப அனுபவம் குறித்து எழுதியிருந்தாய். நீ தினமும் 1 மணி நேரத்திற்கு குறையாமல் ஜெபிப்பது குறித்து மகிழ்ச்சி. ஆனால் ஜெபம் கேட்கப்படுகிறதா? என்ற சந்தேகமும், ஜெபம் கேட்கப்படாதது போன்ற உணர்வும் உன்னை அடிக்கடி சோர்விற்குள்ளாக்குவதையும் எழுதியிருந்தாய். சில ஆலோசனைகளை தருகிறேன் ஜெபத்துடன் அப்பியாசி.

கிறிஸ்தவ வாழ்வின் விசுவாச அடிப்படை படிகள் 3 அவைகள்

| | | |
|---|---|---|
| FIRST | - FACT | முதலாவது – சத்தியம் |
| NEXT | - FAITH | அடுத்தது – விசுவாசம் |
| LAST | - FEELINGS | கடைசியாக – உணர்வுகளும் உணர்ச்சிகளும் |

FACT **சத்தியம்** – வேதவசனமே சத்தியம் அது பொய் சொல்லாது. வேத வசனம் பூரணமானது குறைவற்றது சங். 19:7. இந்த வேதம் சொல்கிறது தேவன் “ஜெபத்தை கேட்கிறவர்” சங். 65:2 என்பதாக. எனவே முதலாவது “என் ஜெபத்தை என் தேவன் கேட்கிறார்” என்பதை விசுவாசி.

FAITH **விசுவாசம்** – நமது விசுவாசம் தேவனுடைய வார்த்தையின் மேல் இருக்க வேண்டும். உணர்வு உணர்ச்சிகளின் மேல் இருக்கக்கூடாது சில நேரங்களில் உணர்வுகளும் உணர்ச்சிகளும் உன்னை ஏமாற்றியதை நீ வாழ்வில் உணர்ந்திருப்பாய். ஒரு காரியம் நடக்கும் என்ற உணர்வு உண்டாகி நடவாமல் போனதையும் நடக்காது என்ற உணர்ச்சி உண்டாகி நடந்துவிட்டதையும் கூட உன் வாழ்வில் அனுபவித்திருப்பாய்.

ஆபிரகாமைப்பார் “நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும்” அதை (தேவனுடைய வார்த்தையை) நம்பிக்கையோடே விசுவாசித்தான் (ரோம. 4:18). தேவனை மகிமைப்படுத்தி விசுவாசத்தில் வல்லவனானான் (ரோம. 4:21) எனவே உணர்வுகள் எதிரிடையாய் தோன்றும்போது ஜெபத்தை கேட்கிற தேவனை மகிமைப்படுத்த பழகினால் விசுவாசத்தில் வல்லவனாவாய்.

FEELINGS **உணர்வுகள்** – உணர்வுகள் வேதவசனத்தின்படி இருந்தால் அவைகளுக்காய் தேவனுக்கு நன்றிகூறு. வேதவசனத்திற்கு எதிரிடையாய் இருக்கிற உணர்வுகளை உதறித்தள்ளிவிடு. உணர்வு உணர்ச்சிகளை ஜெயிக்க தேவை வேத வசனம். ஒரு பறவைக்கு இரு செட்டைகள் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் ஒரு விசுவாசிக்கு ஜெபமும் வேதவாசிப்பும். ஜெபம் ஒரு செட்டை, வேதவாசிப்பு அடுத்த செட்டை ஒருமணி நேரம் ஜெபிக்கும் விசுவாசி ஒருமணி நேரம் வேதத்தை தியானிக்க வேண்டும். வேதத்தை தியானித்து ஜெபிக்கும் பழக்கம் மிகவும் நல்லது. இரு செட்டையும் ஒரே அளவில் இருந்தால்தான் நன்றாக பறவை பறக்க இயலும்!

வேதவசனம்தான் நமது சிந்தையை தேவ சிந்தையால் நிரப்பும்!

உனது அடுத்த கடிதத்தில் உனது வேத தியானம் பற்றி எழுது!

கடைசியாக சந்தேகத்தை விரட்டியடிக்க ஒரு பொன்மொழி "IF YOU HAVE ANY DOUBT, DOUBT YOUR DOUBT; NOT HIS OR HIM OTHERWISE DOUBT WILL MAKE YOU OUT"

“நீ சந்தேகப்படுவாயானால், உன் சந்தேகத்தையே சந்தேகப்படு. தேவனையும்


தேவனுடையவைகளையும் சந்தேகப்படாதே. இல்லையெனில் சந்தேகம் உன்னை அழித்துவிடும்" சந்தேகம் என்பதை உற்பத்தி செய்பவனே பிசாசானவன் என்பதை மறந்துவிடாதே! ஜெபிக்கிறேன்! உனது கல்வியிலும் ஆவியிலும் சிறக்க வாழ்த்துக்கள்.

அன்புடன் அண்ணன்

**B.P. ஆசீர்**

## 25வது முப்பெரும் முகாம் 2012

இடம் : கன்னியாகுமரி பப்ளிக் ஸ்கூல், கன்னியாகுமரி நாள் : 2012 மே 17 to 19




600 பேருக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். விபரம் அடுத்த இதழில்













**வாழ்த்துகிறோம்!** தூத்துக்குடி மாவட்டம் பழைய அப்பநேரி பணித்தள மிஷனெரி சகோதரி. எப்சிபாவும் சகோ. சின்னச்சாமி (ஏ) டேனியலும் 14-6-2012 அன்று திருமணத்தில் இணைக்கப்பட்டார்கள். இவர்களை கிருபையின் ஊழியம் சார்பாக இயேசுவின் இனிதான நாமத்தில் வாழ்த்துகிறோம்.



### செய்தி தொகுப்பு

- உடலின் எடையில் 60 சதவிகிதம் நீர் உள்ளது.
- உடல் இயக்கம் இயல்பாக இருக்க நீர் மிகவும் முக்கியம்
- நீர் சத்து குறையும்போது உயிருக்கே ஆபத்து வரலாம்.
- போதுமான அளவு நீர் இல்லாவிட்டால் சிறுநீரகங்களின் செயல்பாடு பாதிக்கும்.
- உடலில் உள்ள அதிகப்படியான உப்பு கால்சியம் யூரிக் அமிலம் போன்றன நீர் அளவு குறைந்தால் வெளியேற்றப்பட முடியாமற்போகும்.
- எலக்ரோலைட்ஸ் என்ற உடலில் உள்ள மின்பகுபொருள் சமநிலை நீர் குறைவால் பாதிக்கும்.
- சுவாசத்திற்கும் நீர் அவசியம் ஆக்சிஜன் கார்பன் டை ஆக்சைடு மாற்றத்திற்கு முன் தேவையான அளவு திரவம் வேண்டும்.
- செரிமானம் மற்றும் உடல் இயக்கங்கள் போது நடைபெறும், வேதியியல் மாற்றங்களுக்கும் தண்ணீர் அவசியம்.
- உடல் குளிர்ச்சியாக வைக்கப்பட தண்ணீர் வேண்டும்.
- ஆர்த்ரடீஸ் என்ற மூட்டு வலியால் அவதிப்படுகிறவர்கள் 2 மணி நேரத்திற்கு ஒருமுறை தண்ணீர் குடிப்பது அவர்களின் மூட்டுகளின் இயல்பான இயக்கத்திற்கு உதவும்.
- ஆரோக்கியமான ஒருவர் ஒரு நாளைக்கு 8 டம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும்.

## தூத்துக்குடியில் அற்புத உபவாச நாள்

**நாள் : ஜூலை 31 கடைசி செவ்வாய்**
**நேரம் : காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**
**இடம் : காமராஜர் திருமண மண்டபம்,**
**பிரையண்ட் நகர், 5வது தெரு மெயின், தூத்துக்குடி.**

### நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷனெரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம்<br>Grace Ministries<br>Grace Ministries | SBIN0007629<br>TMBL0000156 | SBI Bazaar, Tuticorin<br>TMB Ltd., Sipcot Tuticorin | 10237757808<br>156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம்<br>Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம்<br>Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும்.

நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.